செய்தி குறிப்பு எண்: 48 நாள்: 28.03.2010

## 28–3–2010 – பெரம்பூர் மேம்பாலத் திறப்பு விழா

## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் உரை

பெரம்பூரில் இன்று நடைபெறுவது திறப்பு விழா நிகழ்ச்சியா, திருவிழா நிகழ்ச்சியா என்று எனக்கே திகைப்பாக இருக்கிறது. வட சென்னை என்பது எங்களுடைய இயக்கத்தைப் பொறுத்தவரையில் – கிறித்தவர்களுக்கு ஜெரூசலம் போல – இஸ்லாமியப் பெருமக்களுக்கு எல்லாம் மக்கா, மதினா போல – இந்துக்களுக்கெல்லாம் ராமேஸ்வரம் போல – எங்களுக்கு – திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு வட சென்னை ஒரு இலட்சிய ஷேத்திரம். ஏனென்றால் இங்கே தான் எங்கள் அருமை அண்ணனுடைய குரல் ஒலித்து திராவிட இயக்கத்தை உயிரோடு கொண்டு செல்ல – அரசியல் ரீதியாகவும் வளர்த்திட – இரட்டைக் குழல் துப்பாக்கியாக இயங்குவோம் என்கின்ற பொன்னான சொல்லை உதிர்த்து – அவ்வழியே நடை போடத் தொடங்கிய இடம் வட சென்னை – வட சென்னையிலே உள்ள ராயபுரம் அறிவகம் – அந்த அறிவகத்திலே இருந்து கிளர்ந்தெழுந்த அறப்போர் படை – அந்தப் படையினர் பலரை இழந்து அவர்களுடைய தியாகத்தால் – ரத்தத்தால் – உழைப்பால் – பெரு மூச்சால் கட்டப்பட்ட கோட்டை – அந்தக் கோட்டைக்கு காரணமாக இருந்த புனிதமான பூமி – தியாகப் பூமி – எங்களைப் பொறுத்தவரையிலே – வட சென்னை என்பதால் – வட சென்னை மீது எனக்கு எப்போதும் ஒரு பற்று, பாசம் உண்டு.

அத்தகைய வட சென்னையில் இன்று இந்தப் பாலம் அமைந்திருக் கிறது என்றால், இது இந்த மாநகரின் இரு பகுதிகளை இணைக்கின்ற பாலமாக மாத்திரமில்லாமல் – இரு பகுதிகளாகப் பிரிந்திருக்கின்ற எல்லா இயக்கங்களையும் சேர்ந்த தமிழர்களையெல்லாம் இணைக்கின்ற பாலமாகவும் (கைதட்டல்) இது அமைய வேண்டுமென்று நான் விரும்பு கின்றேன்.

அமையும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இந்தப் பாலத்தை உருவாக்க மத்திய அரசு மொத்தச் செலவில் 35 சதவிகிதத் தையும் – மாநில அரசு 15 சதவிகிதத்தையும் வழங்கி – எஞ்சிய 50 சத விகிதத்தை மாநகராட்சி மன்றம் வழங்கி அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த அருமையான பாலம் – கண் கவரும்

பாலம் – இது எத்தகைய உற்சாகத்தையும் உத்வேகத்தையும் எழுச்சியையும் மகிழ்ச்சியையும் நமக் கெல்லாம் அளிக்கிறது என்பதை எனக்கு முன்னால் பேசிய அனைவரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

எனக்கு இங்கே எழுந்து நின்று பேச இயலவில்லை. உங்களுக்குத் தெரியும் – கடந்த ஆண்டு நான் செய்து கொண்ட மிகப் பிரச்சினைக்குரிய முதுகெலும்பு அறுவை சிகிச்சையின் காரணமாக கால் களில் பலம் குன்றி – கால்கள் நிற்க முடியாத காரணத்தால் – தமிழ்த் தாய் வாழ்த்து – தேசிய கீதம் போன்றவைகளுக்கெல்லாம் கூட நான் எழுந்து நின்று மரியாதை செலுத்த முடியாது – ஆனால் மனதளவில் உங்களிடமெல்லாம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்கிற நிலையில் – இங்கே வரவேண்டியிருக்கின்றது.

பாலம் ஒருவகையில் நமக்கு பலத்தைத் தருகின்றது. எப்படி யென்றால் எனக்குக் கால் சரியில்லை – ஆகவே இங்கே நின்று உங்க ளிடத்திலே பேச இயலவில்லை. “பாலம்” என்பதில் “கால்” சரியாக இல்லா விட்டால் “பலம்” – எழுதிப் பாருங்கள் “பாலம்” என்று – அதிலே காலை அழித்து விடுங்கள் – “பலம்” ஆகி விடும். (பலத்த கைதட்டல்) இந்தப் பாலத்திற்கு கால் சரியாக இருக்கக் கூடாது என்று தான் கடந்த காலத்திலே ஆட்சியாளர்கள் அதை ஒடிக்க, ஊனப்படுத்த, எத்தனையோ முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டாலுங்கூட – உங்களுடைய மனப் பலத்தால் – இந்த வட்டாரத்திலே இருக்கின்ற தமிழ் மக்களுடைய ஏழை எளிய மக்களுடைய, பாட்டாளி மக்களுடைய, தொழிலாளத் தோழர் களுடைய அத்தனை பேர்களுடைய மனப்பலத்தால் – உங்களின் கோரிக்கை இன்றைக்கு வெற்றிகரமாக நிறைவேறியிருக்கின்றது.

இதைக் காணுகின்ற வாய்ப்பு நமக்கெல்லாம் கிட்டியிருக்க என்ன காரணம் என்பதை நம்முடைய மேயரின் உழைப்பு – துணை முதல் அமைச்சருடைய ஆர்வமிக்க முயற்சி என்றெல்லாம் சொன்னார்கள். அவரை “துணை முதல்வர்” என்று சொல்வது கூட, நீங்கள் எல்லாம் அவரைப் பாராட்டுவதைப் பார்த்தால் – போற்றுவதைப் பார்த்தால் – பத்திரிகைகளிலே அவரைப் பற்றி எழுதுவதைப் பார்த்தால் – அவர் உழைப்பதைப் பார்த்தால் – “துணை முதல்வர்” என்பதற்கு ஆங்கிலத்தில் “டெபுடி – சீப் மினிஸ்டர்” என்று கூறுவீர்கள். ஆனால் நான் கருதுகிறேன் – எனக்கு “துணையாக இருக்கின்ற அமைச்சர்” என்று தான் நான்

கருது கின்றேன். (பலத்த கைதட்டல்) அந்த அளவிற்கு எனக்குத் துணையாக இன்று அவர் செயல்படுகின்றார்.

நான் என்ன கருதுகிறேன் என்பதை – என்ன நினைக்கிறேன் என்பதை அறிந்து கொண்டு – அந்த நினைப்பை நிகழ்ச்சியாக ஆக்கு வதற்கும் – நான் கருதுவதை காட்சியாகக் காட்டுவதற்கும் – நான் எண்ணுவதை அப்படியே திண்ணியமாகச் செய்து முடிப்பதற்கும் – அவர் தன்னுடைய திறமையைக் காட்டி வருவதைத் தான் இங்கே நீங்கள் கண்டீர்கள் (கைதட்டல்) அதைத் தான் நீங்கள் போற்றுகின்றீர்கள்.

வட சென்னையைப் பொறுத்தவரையில் நான் முதலில் சொன்னதைப் போல இங்கே திராவிட இயக்கத்திற்கும் சரி – தொழிலாளர்களுடைய பாசறையாம் கம்யூனிஸ்ட் இயக்கங்களுக்கும் சரி – காங்கிரஸ் பேரியக்கத்திற்கும் சரி – பல பெரியவர்கள் – பல மேதைகள் எல்லாம் இங்கேயிருந்து மறைந்திருக்கிறார்கள், இன்றைக்கும் மறையாமல் அவர் களுடைய புகழை செதுக்கி விட்டுப் போயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடத்தில் இன்று இந்த அருமையான பாலம் அமைந்திருக்கின்றது.

நம்முடைய மேயர் சுப்பிரமணியம் – நான் அவர் மேயராக வருவதற்கு முன்பு அவர் இந்தஅளவிற்கு உழைப்பார் – இந்த அளவிற்கு பணி புரிவார் – இந்த அளவிற்கு திறமையைக் காட்டுவார் என்றெல்லாம் எண்ணிட வில்லை. ஆனால் நான் கருதிய அந்தக் கருத்து தவறு என்பதை இன்றைக்கு அவர் செயல் மூலமாக (கைதட்டல்) அவர் என்னைத் தோற்கடித்துக் காட்டியிருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும்.

அவரை எங்கேயாவது திடீரென்று கடைத் தெருவிலே பார்த்தால், இவர் மேயர் என்றோ – இவரா மேயர் என்று கேட்கின்ற அளவிற்குத் தான் உருவம் படைத்தவர். மேயருக்கான தோரணையோ – மேயருக்கான டாம்பீகமோ – மேயருக்கான ஆடம்பரமோ – மேயருக்கான நடையுடை பாவனைகளோ எதுவுமில்லாமல் – ஒரு சாதாரணத் தொழிலாளியைப் போல அவர் இருக்கின்ற காரணத்தினாலே தான் – தொழிலாளர் இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எண்ணங்களை – கருத்துக்களைச் செயல்படுத்த முடிகிறது என்று தான் கருதுகிறேன். அப்படிப்பட்ட அருமைத் தோழர், இன்றைக்கு இந்த மாநகரத்தின் மேயராக இருப்பதும் –

அவருக்குத் துணையாக மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் – கட்சி வேறுபாடு இருந்தாலுங்கூட அவைகளையெல்லாம் மறந்து – மாநகர முன்னேற்றம் தான் முக்கியம் என்ற வகையிலே பாடுபடுகின்ற – இந்தத் தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினர் நம்முடைய மகேந்திரனைப் போல பாடுபடுகிறவர்கள் – மாநகராட்சியிலும் அந்தக் கட்சியின் சார்பில் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். அது மாத்திரமல்ல – சட்டமன்ற உறுப்பினர் மகேந்திரனைப் பற்றியும் எனக்கு நன்றாகத் தெரியும்.

இன்றைக்குள்ள நிலையில் அவர் இங்கே மேடையில் பேசும் போது என்ன பேச வேண்டுமோ அதைப் பேசினார். பாராட்டினார் – அதே நேரத்தில் பட்டா கொடுக்கவேண்டுமென்று அந்தக் கருத்தையும் இங்கே குழைத்து எடுத்துச் சொன்னார். ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர் – அரசாங்க மேடையில் என்ன சொல்ல வேண்டுமென்பதையும் – அவர் இந்த மேடையில் வந்து அமர்ந்திருப்பதைப் பார்த்து யாராவது சந்தேகப் படுவார்களோ என்பதற்காக பட்டாவையும் சேர்த்துச் சொல்லி (சிரிப்பு) திட்டவட்டமாக, தெளிவாக இந்தப் பாலத்தை அமைத்ததற்கு பாராட்டைத் தெரிவித்திருக்கிறார்.

அவர் போன்றவர்கள் – வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்வது – அனைவரும் சேர்ந்து ஒத்துழைத்து மக்கள் பணியாற்ற வேண்டும். மக்களுடைய தேவைகளை உணர்ந்து, அறிந்து புறக்கணிக்காமல் அவைகளை நிறைவேற்ற வேண்டும். நாளைக்கு இந்த பாலம் வருவதால் – இதிலே என்ன திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த குடும்பத்தினர் மட்டும் தான் செல்வார்களா ? கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த குடும்பத்தினர் மட்டும் போவார்களா ? காங்கிரஸ்காரர்கள் மாத்திரம் தான் வருவார்களா ? வியாபாரிகள் என்று வைத்துக்கொண்டால், இங்கே அமர்ந்துள்ள வெள்ளையன் மாத்திரம் தான் பயன்படுத்துவாரா ? இல்லை, யில்லை. எல்லோரும் பயன்படுத்திக் கொள்வார்கள். எல்லோருக்கும் பொதுவானது தான் இந்தப் பாலம். அதைப் போல நாட்டுப் பிரச்சினைகள் எல்லோருக்கும் பொதுவானது என்று கருதிக் கொள்ள வேண்டும். அப்படிக் கருதினால் தான் நமக்குள் இருக்கின்ற ஆயிரம் வித்தியாசங் கள், வேறுபாடுகள் அனைத்துக்கும் அப்பால் ஒரு சக்தியாக – மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற சக்தியாக – நாம் விளங்க முடியும்,

எல்லோரும் சேர்ந்து ஒரு பகுதியிலே தீப்பிடித்து எரியும்போது, அனைவரும் சென்று கட்சி பாராட்டாமல், நீ காங்கிரஸ் – இங்கே வராதே, நீ கம்யூனிஸ்ட் – இங்கே வராதே, நீ தி.மு.க., நீ தி.க., நீ அ.தி.மு.க. உங்களுக்கெல்லாம் அங்கே இடம் கிடையாது என்று எண்ணினால் – திட்டம் வகுத்தால் – வராதே என்று மிரட்டினால் – அது நல்ல நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அறிகுறியாக அமையாது என்று தான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களைத் திரட்டி – மக்களுக்காக நடைபெற வேண்டிய காரியங் களுக்காக – கிளர்ச்சி செய்து – வேண்டுகோள் வைத்து – ஆர்ப்பாட்டங் கள் நடத்தி – ஊர்வலங்கள் நடத்தி – பவனிகள் நடத்தி – பொதுக் கூட்டங்கள் நடத்தி – தனித்தனியாக ஒவ்வொரு கட்சியும் சேர்ந்து இல்லா விட்டாலும் – தனித்தனியாக இருந்து ஒரு கோரிக்கை நிறைவேறுகிற நேரத்தில் – அது பொதுவான கோரிக்கையாக இருந்தால் அந்தக் கோரிக்கை நிறைவேறுகின்ற மகிழ்ச்சியில் – குதுாகலத்தில் – அனைவரும் ஒரே மேடையில் இருந்தார்களேயானால் – நான் இந்தப் பாலத்தைப் பார்க்கின்ற பரவசத்தை விட – ஒரே மேடையில் எல்லா கட்சிக் காரர்கள் இங்கே இருக்கிறார்கள் – மாநகராட்சி மன்றத்திலே இருக்கின்ற கட்சிகள் எல்லாம் இன்றைக்கு வடசென்னையிலே நடைபெறுகின்ற பெரம்பூர் பாலத் திறப்பு விழாவிலே காணுகின்ற பாக்கியத்தைப் பெற்றோம் – இது மேம்பாலத்தைக் கட்டித் திறந்ததை விட – எல்லோரும் ஒரே இடத்திலே அமர்ந்து – இந்தப் பொதுப் பிரச்சினையிலே பொறுப்போடு கலந்து கொண்டிருக்கிறார்களே என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும். அதை நான் பெரிய பாக்கியமாகக் கருதுவேன். ஆனால் அது நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் – நாம் உருவாக்கிக் கொண்ட அரசியல் பண்பாட்டின் காரணமாக – அது இயலாமல் போகிறது.

இந்த மாநிலத்தை விட்டு அடுத்த மாநிலத்திற்குச் சென்றால், அங்கெல்லாம் இந்த அளவிற்கு ஆக்ரோஷமான கருத்து வேறுபாடு கிடையாது. பொதுப் பிரச்சினைகளிலே எல்லோரும் ஒன்றாகக் கூடி மகிழ்கின்ற நிலை பக்கத்து மாநிலங்களிலே, கேரளா ஆகட்டும், அல்லது ஆந்திரா ஆகட்டும், ஏன் மேற்கு வங்கம் ஆகட்டும், திரிபுரா ஆகட்டும், டெல்லிப் பட்டணம் ஆகட்டும் – எங்கு சென்றாலும் அந்தப் பண்பாட்டைக் காண முடிகிறது. தமிழ்நாட்டிலே தான் என்ன பாலம் பெரம்பூரிலே கட்டினாலுங்கூட நம்மிடையே பாலத்தைக் கட்ட முடியாமல் நாம் அவதிப்

பட்டுக் கொண்டிருக்கிறோம். அது பண்புப் பாலம் – இது அன்புப் பாலம் – இது நட்புப் பாலம் – இது பொதுமக்களுக்காக இருக்க வேண்டிய பாலம் – அப்படிப்பட்ட பாலத்தை அமைத்தால் தான் இந்தப் பாலங்களால் உருவாகின்ற பயன்களை நாம் அடைய முடியும்.

இன்னும் பல பாலங்கள் இந்தப் பெரம்பூர் பகுதியிலே கட்ட வேண்டும் – வட சென்னைப் பகுதியிலே கட்ட வேண்டும் என்று தம்பி டி.கே.எஸ். இளங்கோவனைப் போன்றவர்கள் இங்கே பேசும்போது குறிப் பிட்டார்கள். எனக்கும் அந்தக் கோரிக்கையிலே எந்தவிதமான மாறுபாடும் இல்லை. எனக்கு மாறுபாடு இல்லாத காரணத்தால் அவைகளை நிறைவேற்றுகின்ற அந்தப் பணியிலே நிச்சயமாக இந்த அரசு ஈடுபடும். மாநகராட்சி மன்றமும் ஈடுபடும். நம்முடைய அதிகாரிகள் எல்லாம் ஈடுபடுவார்கள் என்று நான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே இந்தப் பாலம் கட்ட வேண்டும் என்பதற்காகத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்தவர் – இந்தத் தொகுதியும் இணைந்து நாடாளுமன்றத் தொகுதியின் உறுப்பினராக வெற்றி பெற்று – மத்தியிலே அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்து – டோகா மாநாடு வரையிலே சென்று நம்முடைய இந்திய நாட்டின் குரலை ஓங்கியொலித்த தம்பி முரசொலி மாறன் அவர்களைப் பற்றி இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். அந்த முரசொலி மாறனுடைய பெயரை இந்தப் பாலம் பெறட்டும் (பலத்த கைதட்டல்) என்று கேட்டுக் கொண்டு எல்லோரும் இதை ஆதரிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு; இந்தப் பாலத்தின் வெற்றிக்கும் இதை அமைப்பதற்கும் பாடுபட்ட அனைவருடைய ஆர்வத்தையும் பாராட்டி, வாழ்த்தி விடைபெறுகிறேன்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச்
செயலகம், சென்னை–9.